செ.வெ.எண். 04/ஆகஸ்ட்                                                                                    தேதி : 05.08.2016

**பத்திரிக்கைச் செய்தி**







மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித்துறை சார்பில் தருமபுரி மாவட்டம், கடத்தூர் அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரியை காணொலி காட்சி (Vedio conformance) மூலமாக துவக்கி வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் கடத்தூர் அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரியில் குத்து விளக்கேற்றி மாணவ, மாணவியர்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு. தொ.மு. நாகராஜன், மொரப்பூர் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி. லலிதா குப்புசாமி, கடத்தூர் பேரூராட்சித் தலைவர் திரு. செந்தில்குமார், துணைத்தலைவர் திரு. சசிகுமார், அரூர் தியாகி சுப்பிரமணிய சிவா சர்க்கரை ஆலை தலைவர் திரு. பார்த்தீபன், பூமாண்டஅள்ளி ஊராட்சிமன்ற தலைவர் திருமதி. கவிதா நாகராஜன், மல்லிக்குட்டை ஊராட்சிமன்ற தலைவர் திரு. முத்துவேல், காளப்பனஅள்ளி ஊராட்சிமன்ற தலைவர் திரு. ராஜா,

தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. மாது, ஒன்றியக்குழு உறுப்பினர் திரு. இலட்சுமணன், வட்டாட்சியர் திரு. தமிழசன், கடத்தூர் அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் திரு. சௌந்திரராஜன், தருமபுரி அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரி திரு. மகாலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.